**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.164/2015**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : மணித்தேவர் | Caste | : |
| Father‘s Name | : அம்மாசிதேவர் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present.)
**12.01.2024**
**முதல் விசாரணை**

நான் திருமங்கலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 21.05.2013 அன்று திருமங்கலம் டு சோழவந்தான் ரோட்டில் உள்ள மொக்கையன் அம்பலம் நகரில் உள்ள முனியாண்டி கோவிலில் நான் மாலை 6.00 மணியளவில் நான் சாமி கும்பிட்டு கொண்டிருந்த போது என்னிடம் ஒரு நபர் தனது தங்கைக்கு திருமணம் என பத்திரிக்கை கொடுக்க வந்ததாக கூறினார். என்னை விசாரித்த போது நான் கோவிலில் இருப்பதாக தெரிந்து அங்கு வந்ததாக கூறினார். நான் அவரை பற்றி விசாரித்த போது எனது அப்பாவிற்கு நீங்கள் தெரிந்தவர் என கூறினார். நான் கையில் அணிந்திருந்த 12 கிராம் கல் மோதிரத்தை பார்த்துவிட்டு தருவதாக கூறி அவர் என்னிடம் வாங்கினார். அதை அவரது கையால் அவரது துடைத்துவிட்டு அழுக்காக உள்ள என கூறி திருப்பி என்னிடம் தந்தார். உடனே எனது அப்பா வந்துவிட்டார். அவரிடம் மோதிரத்தை காண்பித்து உங்களிடம் மீண்டும் தருகிறேன் என சொல்லி என்னிடம் மோதிரத்தை வாங்கிவிட்டு அவர் வந்த டிவி எஸ் எக்ஸ்செல் வாகனத்தில் வேகமாக சென்றுவிட்டார். நான் பின்னாடி சென்று பார்த்தேன். என்னால் அவரை கண்டுபிடிக்கவில்லை. அதன் பின்பு நான் திருமங்கலம் நகர் காவல் நிலையத்தில் சம்பவம் பற்றி புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் கொடுத்தது தான். புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி புகார் அ.சா.ஆ. 1 ஆகும். மேற்படி மோதிரத்தை சம்பவம் நடந்து இரண்டு வருடங்களுக்குள் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக் கொண்டேன். சம்பவம் நடந்து 13 ஆண்டுகள் ஆனதால் எனக்கு ஆஜர் எதிரியை சரியாக நினைவு இல்லை. நான் நீதிமன்றத்தில் வாங்கிய வழக்கு சொத்தை இன்று கொண்டுவந்துள்ளேன். அது சா.பொ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி. இல்லை**